Registered as a Newspaper in Ceylon ** விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9 இதழ் 93

போன் 889 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க வைகாசி 1 ஸபர்4 திங்கட்கிழமை [15-5-67]

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல் முதலியவைகளுக்கும்
நவீன முத்துமாலை
முடிமயிர் வகைகளுக்கும்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### பல அங்கத்தவர் தொகுதிகள், அல்லது

# தோட்டங்களுக்கென விசேஷத் தொகுதிகள்

## தனிவாக்காளர் டாப்புக்கு பிரதமரின் மாற்று யோசனை

### மல்வத்தை பீடாதிபதிக்கு எழுதிய கடித விபரம்

கொழும்பு, ஞாயிறு

'பல அங்கத்தவர் தேர்தல் தொகுதிகளை உருவாக்குவதன் மூலம் அல்லது விசேஷ தோட்ட தொகுதிகளை உருவாக்குவதன் மூலம் அல்லது இவை இரண்டையும் இணைப்பதன் மூலம் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் அமுலாகும்போது எழும் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும்' என்று பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயகா இன்று மல்வத்தை மகாநாயக தேரோவுக்கு அனுப்பிய ஒரு கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

இப்படிச் செய்வதின் மூலம் சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் அதேவேளையில் பெரும்பான்மை மக்களின் உரிமைகளுக்கு ஊறுஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும் முடியும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த அம்சங்கள் தற்பொழுது விவாதிக்கப்பட்டு வரும் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்த அமுல் மசோதாவில் இடம்பெருவிட்டாலும் ஆலோசித்து சாத்தியமாக்கிக்கொள்ளலாமென்று பிரதமர் குறிப்பிட்டிருக்கிறார்.

சிறிமா—சாஸ்திரி ஒப்பந்த அமுல் மசோதாவுக்கு மகாநாயகதேரோ உட்பட எதிர்க்கட்சிகள்பலவும்எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றன. பிரஜாவுரிமைபெறும் இந்திய வம்சாவழியினரை தனி வாக்காளர் பட்டியலில் வைக்கவேண்டுமென்று எதிர்க்கட்சியினர் வற்புறுத்துகின்றனர். இந்தக்கருத்துக்கு மாற்றுயோசனையாகவே பிரதம மந்திரி தற்பொழுது மேற்படி கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.

கண்டியர்களின் நியாயமான பீதி குறித்து நான் நன்கு அறிவேன். சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் அமுலாகும்போது அவர்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் பாதிக்கப்படும் என்ற கருத்தையும் நான் உணர்கிறேன். இதற்கு பரிகாரமாக பல அங்கத்தவர் தொகுதிகளை உருவாக்கலாம் அல்லது தோட்டப் பகுதிகளுக்கென விசேஷ

[6-ம் பக்கம் பார்க்க]

## நகைக்கடையில் 'செக்'மோசடி முயற்சி

### இருவர் கைது; ஒருவர் தேடப்படுகிறார்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல நகைக்கடையொன்றில் நேற்றுக்காலை நடைபெற்ற செக் மோசடி ஒன்று கடைசிநேரத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. இதுசம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் இருவர் உடனடியாகவே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்பட்ட ஒரு கிராம சபை அங்கத்தவர் என்று கூறப்படும் சங்கரப்பிள்ளை செல்வத்துரை என்பவரும் பளை வீமன்காமத்தைச் சேர்ந்த செல்லப்பா தியாகராசா என்பவரும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர். 10000 ரூபாய் பெறுமதியான செல்லுபடியாகாத ''செக்'' ஒன்றை மாற்ற எத்தனித்தபோதே இவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனராம்.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல புரக்ட்டர் ஒருவரின் பெயரைச் சொல்லி கன்னாதிட்டியிலுள்ள நகைக்கடையொன்றில் 10,000 ரூபாவுக்கான கள்ள 'செக்' ஒன்றைக் கொடுத்து 5,000 ரூபாவுக்கு நகைகள் தருமாறும், மிகுதி 5000 ரூபாவையும் சம்பந்தப்பட்ட

(6-ம் பக்கம் பார்க்க)

### வல்வை சம்பவ விசாரணை:

## "நேரடியாகவே சூடு தாக்கியிருக்கும்"

### கைரேகை நிபுணர் சாட்சியம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

'எலும்பு ஒரு கடினமான பொருள். கடினமானபொருளில் குண்டுபட்டால் அது உடையும். குண்டுதரையில் பட்டு ஆளைத்தாக்குமானல் அது ஆளைக்கொல்லாது. ஆனல் காலஞ்சென்றவர் நேரடியாகவே சுடப்பட்டிருக்க வேண்டுமென்று நான் கருதுகின்றேன்.'

இவ்வாறு வல்வெட்டித் துறையில் கடந்த மாதம் நடைபெற்றதுப்பாக்கிப்பிரயோக சம்பவத்தில் மரணமான ஆர். சிவஞானசுந்தரம் என்றஇளைஞனின் மரண விசாரணை இன்று மீண்டும் நடைபெற்றபோது கொழும்பு கைரேகைநிபுணர் திரு. சிறிமானே கூறினர், மரண விசாரணை நடத்திய மாஜிஸ்திரேட் கே. விக்கினராசா விசாரணையை முடித்துக் கொண்டு தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 21ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

கொழும்பு கைரேகை நிபுணர் திரு. சிறிமானே சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

எவ்வளவுதூரத்தில்நின்று சுடப்பட்டதென்று என்னல் சொல்ல முடியாமல் இருக்கிறது. குண்டின் உடைந்த குதிகளில் உலோகத்துண்டுகளும் ஒரு அலுமினியத்துண்டும் இரண்டு ஈயத் துண்டும் நான்கு நிக்கல் துண்டுகளும் இருந்தன. இவைகள் றைபிள் குண்டின் உலோகங்கள். எந்த றைபிளால் சுடப்பட்டதென்று என்னல் சொல்ல முடியாது. நான் 10-4-67 பிற்பகல் சம்பவம் நடந்த இடத்திற்குப் போனேன். என்னுடன் காங்கேசன்துறை பொலிஸ் உதவிசுப்பிரிண்டன் லியனகே வேறும் சில பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் வந்திருந்தனர். சம்பவம்நடைபெற்றஇடத்தை அவர்களின் உதவிகொண்டு பார்வையிட்டேன். எனக்கு சனசமூகநிலையகட்டிடத்திலுள்ள சன்னங்கள் பட்ட இடத்தைக் காட்டினர்கள். இந்த அடையாளம் றேட்டுக்கு நேராக சமாந்தரமாக சுடப்பட்டவை. இது ஒரு சாதாரண துப்பாக்கியினல் சுடப்பட்டவையெனக் கருதுகிறேன். இந்த இடத்தில் பட்ட அடையாளம் 40 அங்குல அளவு விட்ட அளவுடையதாக இருந்தது. அதில் 70 சன்ன அடையாளங்கள் இருந்தன. சனசமூகநிலையக் கட்டிடத்திற்குப் பக்கத்திலுள்ள ஒரு கட்டிடத்தின் கதவில் இதேமாதிரி ஒரு சூட்டு அடையாளமும்இருந்தது. வேறு எந்த விதமான

[6-ம் பக்கம் பார்க்க]

## தேயிலைக்குப்பதில் மரத்தூள்!

யாழ்ப்பாணம், திங்.

தேயிலைப்பெட்டிக்குள் மரத்தூள் இருந்ததாம். யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையதேநீர்சங்கத்தினர் யாழ்ப்பாணத்திலுள்ள கம்பனியொன்று தயாரிக்கும் தேயிலைப்பெட்டி ஒன்றை வாங்கி உடைத்தபோதே இந்த மரத்தூள் தேயிலைக்குப் பதிலாக அடைக்கப்பட்டிருந்ததாம். யாழ்ப்பாணம் பொலிஸார் இந்த மோசடியைக் கண்டுபிடிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இலாபகரமான
கோழிப்பண்ணை

யாழ்ப்பாணம் வை. எம். சீ. ஏ. மண்டபத்தில்
மெசேர்ஸ். எவ். அன்ட் ஜீ. சைக்ஸ்
லிமிட்டெட் [லண்டன்] ஸ்தாபனத்தாரின்
பிரதம ஆலோசகர்

டேவிட் வாட்டமன் அவர்கள்

"இலாபகரமான கோழிப்பண்ணை"

என்னும் பொருள்பற்றி 1967-ம் ஆண்டு மே மாதம் 15-ம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு ஓர் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

விரிவுரையின் பின்னர் ஒரு படக்காட்சி இடம்பெறும்

அழைப்பிதழ்மூலமாகவே பொதுமக்கள் அனுமதிக்கப்படுவர். விபரங்களுக்கு எங்களுடனேனும், அல்லது உங்கள் பகுதி அரசாங்க கால்நடை வைத்தியருடனேனும், அல்லது கிருஷிக போதனையாளருடனேனும் தொடர்பு கொள்ளவும்.

சிலோன் ரிறேட் எக்சேஞ், Ceylon Trade Exchange,
சைக்ஸ் பிரான்சைசஸ் ஏஜண்டுகள், Franchise Agents for Sykes,
51/6, மேர்க்கண்டைல்ஹவுஸ், 51/6, Mercantiel House,
குவீன் வீதி, Queen Street,
கொழும்பு - 1. Colombo - 1.
தொலைபேசி: 5521 Tel: 5521.

1776

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பட்டினியால் வாடுவோர்களாலும் வேலை வாய்ப்பின்றி அல்லல்படுவோர்களாலும்தான் புரட்சிகள் ஏற்படுகின்றன.

— டாக்டர் ராதாகிருஷ்னன்


# ஈழநாடு

Elanadu Natioal Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்கஹு வைகாசி மீ 1உ (15-5-67)


## வியட்னுமும் அமெரிக்காவும்

வியட்னும் யுத்த நிலைமை பயங்கரமான கட்டத்தை அடைந்து கொண்டிருக்கிறது. வடக்கு வியட்னும் மீது அமெரிக்க விமானங்கள் தொடர்ந்து குண்டு வீச்சு நடத்துவதாகவும் பொது மக்கள் வாழும் பகுதிகளிலும் குண்டுவீசப்பட்டுவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. புத்த ஜயந்தி தினத்தில் இருதரப்பினரும் ஒருநாள் யுத்த நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டிருக்கின்றனர். எனினும் அதற்குள் வடவியட்னும் மீது பெருமளவில் அமெரிக்கப் போர்விமானங்கள் குண்டு வீசித்தாக்குதல் நடத்திவருகின்றன. வியட்காங்கியர் எனப்படும் கம்யூனிஸ்ட் கொரில்லாக்களின் நடவடிக்கைகளும் குறைந்ததல்ல.

இன்றையநிலை இன்னும் சில காலத்துக்கு வியட்னுமில் நீடிக்குமானுல் அமெரிக்காவுக்கும் சீனுவுக்குமிடையில் நேரடி யுத்தம் ஏற்படுவது தவிர்க்கமுடியாதது என்றும், சோவியத் சீன ஒப்பந்தம் இன்னும் அமுலிலிருப்பதால் இதில் சோவியத்யூனியன் தலையீடும் ஏற்பட்டு மூன்ருவது உலக யுத்தம் ஏற்படலாமென்றும் ஐ. நா. தலைமைக்காரியதரிசி யுதாண்ட் அச்சம் தெரிவித்திருக்கிருர். வடக்கு வியட்னும் மீது குண்டு வீசுவதை அமெரிக்கா நிறுத்திஞல் வியட்னும் சமாதானப் பேச்சுவார்த்தை ஒரு வாரத்துக்குள் ஆரம்பமாகும் என்றும் யுதாண்ட் அறிவித்திருக்கிருர். அதாவது மூன்ருவது உலகயுத்தம் ஏற்படுவதைத் தவிர்ப்பதானுல் அமெரிக்கா குண்டு வீசுவதை நிறுத்த வேண்டுமென்றும் மற்ெருரு உலக யுத்தம் ஏற்பட்டுப் பேரழிவு நேருவதைத் தவிர்க்கும் பொறுப்பு அமெரிக்காவிடமே இருக்கிறதென்றும் யுதாண்ட் கூறுகிருர்.

சுவீடனில் சமீபத்தில் நடைபெற்ற 'யுத்த விசாரணை மன்றம்' வியட்னுமில் யுத்தக்குற்றங்களை அமெரிக்கா செய்துவருகிறதென்பதை நிரூபித்து அமெரிக்கா 'குற்றவாளி' எனத் தீர்ப்பளித்தது. அமெரிக்ககுண்டு வீச்சுக்கு ஆளாகியுள்ள மக்கள் படும் அவதியினை சுவீடனில் படம் போட்டுக் காட்டியபொழுது அந்தக் காட்சிகளைப் பார்த்த மக்கள் வேதனை தாங்காது விம்மி விம்மி அழுதிருக்கிருர்கள். கால் இழந்தவர்களும், கையிழந்தவர்களும் நோயுற்ற குழந்தைகளும் படும் அவதியைப் பார்த்துக் கண்ணீர் விட்டனர். அந்த மக்களுக்குத் தங்கள் அனுதாபத்தையும் உரியதாக்கிக்கொண்டனர். அமெரிக்காமீது ஆத்திரம்கொள்வதும் இயல்பு. வியட்னுமில் அமெரிக்க அரசாங்கம் காலவைத்துக்கடைப்பிடிக்கும் கொள்கையினுல் உலக மக்களினதும் நாடுகளினதும் அதிருப்தியையும் வெறுப்பையும் மட்டுமல்லாது அமெரிக்க மக்களின் எதிர்ப்பையும் தேடிக்கொண்டுள்ளது. இதுதவிர கோடிக்கணக்கான பணத்தையும் அது செலவிடுகிறது. ஆக்கரீதியான அலுவல்களுக்குச் செலவிடவேண்டிய பணத்தை அழிவுக்குச் செலவிடுகிறது.

உலக சமாதானமே தனது நோக்கமென்றும் இதற்காகவே வியட்னுமில் தாங்கள் கால் வைத்துள்ளதாகவும் அமெரிக்கர் கூறுகின்றனர். உண்மையில் அவர்களுக்குச் சமாதானத்தில் ஆர்வமும் நம்பிக்கையும் இருக்குமானுல் அதை உணர்த்துவதற்கு இது நல்ல சந்தர்ப்பம். யுதாண்ட் கூறியுள்ள யோசனையை ஏற்று வடவியட்னும் மீது குண்டு வீசுவதை நிறுத்திஞல் ஓரிரு வாரங்களுக்குள் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பமாக வழி பிறக்கும். மீண்டும் உலக யுத்தம் ஏற்படாமல் தடுக்கும் பொறுப்பையும் அமெரிக்கா நிறைவேற்றியதாகச் சரித்திரத்தில் இடம்பெறும் உலகமக்களின் பாராட்டும் கிடைக்கலாம்.

---

கோப்பாய்

## தவ நெறிமன்றம் தீர்மானம்

கோப்பாய், ஞாயிறு

'சைவ ஆலயங்கள் தோறும் சினிமாப்பாடல்களையும், டப்பா சங்கீதங்களையும் ஒலிபரப்பாது இறை புகழ்பாடும் தேவாரங்களையும், பக்திப்பாடல்களையுமே ஒலிபரப்பி, சதுர்க் கச்சேரிகளைக் கைவிட்டு, சமய உபந்யாசங்கள், இலக்கியக் கருத்தரங்குகள், சங்கீத நிகழ்ச்சிகள், பரதநாட்டியம் போன்ற கலைநிகழ்ச்சிகளை நடாத்தி சமய மறுமலர்ச்சிக்கு அடிகோலி ஆலயங்கள் தோறும் தெய்விக மணங்கமழச் செய்ய முன்வர வேண்டுமென, சகல இந்து சமய ஆலய தர்மகர்த்தாக்களையும், தர்மகர்த்தாசபைகளையும், அறநிலையப்பாதுகாப்பாளர்களையும். கோவில் குருமார்களையும், இம்மன்றம் பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றது' என்னும் தீர்மானம் கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தின் 7 வது மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## பிரேமதாசா பயணமானுர்

கொழும்பு, ஞாயிறு

தகவல், ஒலிபரப்பு ஸ்தலஸ்தாபன அமைச்சுகளின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஆர். பிரேமதாசா பிரிட்டன், மேற்கு ஜெர்மனி மற்றும் சில நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். நேற்று அவர் இங்கிருந்து பயணமானுர்.

---

கோப்பாய், சனி

அரசாங்கத்தாரால் வழங்கப்படும் நன்கொடைப் பணத்தைக் கொண்டு கோப்பாய் நாவலர் பாடசாலைக்கான புதிய கட்டடமொன்றை உருவாக்க இப்பாடசாலை பெற்ருேர் ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டுவிழா அடுத்தமாதம் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

---

வடபகுதி அசைஸ்

## 'மூன்று முருங்கை வெட்டியதாக முத்தாச்சி கூறியது சரி'

### மூளாய் கொலை வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், திங்கள்

'முத்தாச்சியும் செல்லமும் 3 முருங்கை மரங்கள் வெட்டியதாக சாட்சியத்தில் கூறியிருந்தால் அது சரியா?' என்று அட்வகேட் இரகுபதி கேட்டபோது, 'சரி' என நன்னியன் பதிலளித்தார். இதைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் இராசையா 10 முருங்கை மரங்கள் வெட்டப்பட்டிருந்ததாக சாட்சியத்தில் கூறியிருந்தால் அது சரியா என்று அட்வக்கேட் கேட்டதும் சாட்சி பதில் எதுவும் கூருமல் மௌனமாக நின்ருர்.

மூளாய் கொலை வழக்கு பன்னிரண்டாவது தினமாக நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் வி. தென்னக்கோன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. விசாரணையை பார்ப்பதற்கு கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானேர் திரண்டிருந்தனர்.

கடந்த மூன்று தினங்களாக சுமார் பத்து மணித்தியாலங்கள் நன்னியன் சாட்சிக்கூண்டில் நின்று அட்வக்கேட் இரகுபதியின் கேள்விகளுக்கு பதிலளித்துக்கொண்டிருந்தார்

இவ்வழக்கில் 66-ம் ஆண்டு மே மாதம் 18-ந் திகதி சுப்பர் முருகேசுவை சுப்பர் கணபதியும், கணபதி தெய்வேந்திரனும் கொலை செய்ததாக குற்றம் சட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வக்கேட் பி. இரகுபதி புறக்டர் குலநாயகத்தின் அனுசரணையுடன் ஆஜரானுர். எதிரிக்காக திரு. எஸ். தில்லையர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார்.

நன்னியன் கூறியதாவது:

நாங்கள் பொலிசில் முறைப்பாடு செய்ததும், இன்ஸ்பெக்டர் இராசையாவும் பொலிசாரும் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தார்கள். ஒரு பக்கத்தில் வெட்டிய முருங்கை மரமும் மறு பக்கத்தில் பிரேதமும் கிடந்தது. நடுவில் பொலிஸ் உத்தியோகத்தர் இருந்தார். மாமரத்தின் கீழ் என்னை விசாரணை செய்தார்கள்.

வழ: மல்லாகம் கோர்ட்டில் இன்ஸ்பெக்டர் சாட்சியமளித்தாரா?- ஆம்.

வழ: அங்கு நீரும் சாட்சியமளித்தீர்?- ஆம்.

வழ: இன்ஸ்பெக்டர் இராசையா 10 முருங்கை மரங்கள் வெட்டப்பட்டதென சாட்சியத்தில் கூறியதை ஏற்றுக்கொள்வீரா?- எனக்கு சொல்ல முடியவில்லை.

வழ: பொலிசாருக்கு இரவு 11-30 மணிக்கு முறைப்பாடு செய்தீர்?- எனக்குநேரம் தெரியாது.

17-ந் திகதி புதன்கிழமை காலை விசாரணைதொடர்ந்து நடைபெறும்.

## 800 பேருக்கு வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசாங்கத்துக்குச் சொந்தமாக 50 நெசவு நிலையங்கள் இதுவரை திறக்கப்பட்டு அங்குவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருகின்றன. இந்த 50 நெசவு நிலையங்களிலும் சுமார் 560 படித்த வாலிபர்களும் பெண்களும் வேலை செய்வதாக அண்மையில் யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்திலிருந்து வெளிவந்த அறிக்கையொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

மேலும் கட்டிமுடிக்கப்பட்ட நிலையிலுள்ள 5 நெசவு நிலையங்கள் இம்மாத இறுதியில் திறக்கப்படவுள்ளனவாம். மேலும் 22 நெசவு நிலையங்கள் இன்னும் மூன்று மாத காலத்துக்குள் திறந்து வைக்கப்படும். இவைகள் திறந்துவைக்கப்பட்டதும் மேலும் சுமார் 300 படித்த வாலிபர்களுக்கும், பெண்களுக்கும் வேலை கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. [ந, நி]

## தொழிலாளர் கோரிக்கை

### நடவடிக்கை எடுப்பதாக உறுதி

யாழ்ப்பாணம், திங்கள்

ஸ்தலஸ்தாபன நகரசபை தொழிலாளர் சங்க வடமாகாணக் கிளையினர் அண்மையில் யாழ். மாநகர விசேஷ ஆணையாளர் திரு. எஸ். நடேசன், சுகாதார அதிகாரி டாக்டர் இராஜசூரியர் ஆகியோரைப் பேட்டிகண்டு தமது குறைகள் பற்றித் தெரிவித்தனர்.

தொழிலாளரின் பின்வரும் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாக உறுதி தெரிவிக்கப்பட்டது.

போயா நாட்களுக்கு மேலதிக சம்பளம் வழங்குவது, ஐந்து வருடம் தொடர்ந்து சேவை செய்தவர்களை மாதக் கூலியாக்குதல், தேவை அடிப்படையில் கங்காணிமார்களை நியமித்தல், தொழிலாளர்களுக்கு வீட்டுத் திட்டம் நிறைவேற்றுதல், தொழிலாளர் வசிக்கும் இடங்களுக்கு மின்சாரவசதி கொடுத்தல், பென்சன் பெற்ற தொழிலாளர்கள் இறந்த பின்னர் அப் பணத்தை இறந்தவரின் மனைவியோ பிள்ளைகளோ பெறக்கூடிய வகையில் அரசாங்க காப்புறுதித் திட்டத்தில் சேர்க்க பணங் கழிப்பது.

[ந, நி.]

---

[5-ம் கலத் தொடர்ச்சி]

'சபைகளும் சங்கங்களும் சங்கீதத்தை வளர்க்கப் போவதில்லை, அதன்வளர்ச்சி சுயமானது, இயற்கையானது. பேசாமல் விட்டு விட்டால் அது தன் பாட்டுக்கு வளர்ந்து கொண்டே போகும். மனிதன் வில்லங்கமாக பிரயத்தனம் செய்து சங்கீதத்தின் வளர்ச்சியை ஊக்கப்படுத்தவோ, கட்டுப்படுத்தவோ முடியாது, அரியக்குடி போன்ற பெரிய வித்வான்களின் 'ஜெனரேஷன்' முடிந்து அவர்களுடைய தரத்துக்கு ஈடாக இப்பொழுது எவருமில்லையே என்று நாம் வருத்தப்படப்படாது. வருங்காலத்தில் எப்பொழுதாவது அவர்களைப் போல அல்லது அவர்களிலும் பார்க்கத் திறமையான ஒரு சங்கீத பரம்பரை எப்படியும் உண்டாகும்.''

அநேகமாக எல்லா வித்வான்களுக்கும் ஸ்ரீ மணி ஐயர் பக்கவாத்தியம் வாசித்திருக்கிருர். 'எல்லோருடைய பாட்டிலும் சிறந்த அம்சங்கள் உள்ளன. ஆயினும் அரியக்குடியாரின் பாட்டில் தான் எல்லாவிதமான சிறப்புகளும் காணப்பட்டன'.

ஐயர் அவர்களுக்கு மூன்று புதல்வர்களும் இரு புத்திரிகளும் இருக்கிருர்கள். மூத்தவர் ஒரு என்ஜினியர்' நன்ருக மிருதங்கம் வாசிப்பார். பாலக்காடு ரகு, குஞ்சுமணி, கல்பாத்தி ராமநாதன், உமையாள்புரம் சிவராமன்- இவர்கள் எல்லோரும் மணி ஐயரின் சிஷ்யர்களில் சிலர்.

— வழிப்போக்கன்

---

## நாட்டிலும் நகரிலும்

கிட்டத்தட்ட முப்பது வருடங்களுக்குப் பிறகு யாழ்ப்பாணத்து ரஸிகப் பெருமக்களை நேற்றிரவு மகிழ்வித்த ஸ்ரீ பாலக்காடு மணிஐயர் கர்நாடக சங்கீத உலகில் ஒப்பாரும் மிக்காருமில்லாத தனிக்காட்டுராஜா போன்று விளங்கிவருகிருர். அரியக்குடி. செம்மங்குடி, சித்தூர், செம்பை, முசிரி, மஹாராஜபுரம், ஜி. என். பி போன்ற பெரும் வித்வான்களுக்கு மிருதங்கம் வாசித்த மணிஐயர் அவர்கள் ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாளுக்குப் பக்கவாத்தியம் வாசித்ததையும் நேற்றுத்தான் யாழ்ப்பாண ரஸிகர்கள் முதன்முதலாகக் கேட்டு இன்புற்ருர்கள்.

தூய சாஸ்திரீய சங்கீதத்துக்கு நிலைக்களனுக விளங்கும் கான சரஸ்வதி ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் வாய்ப்பாடகர் வரிசையில் கடந்த 30, 35 வருடங்களாக முன்னணியில் நிற்பவர். இவ்விருவரும் ஒன்று சேர்ந்து மேடையேறி கச்சேரி செய்வது இசை விரும்பிகள் செய்த பாக்கியம் என்றே கூறவேண்டும்.

இதில் ஒரு சிறிய இரகசியம் இருக்கிறது. 'பட்டும் மணியும்' இசைத் துறையில் மட்டுமன்றி சாதாரண வாழ்க்கையிலும் நெருங்கிய உறவினர்கள். ஸ்ரீமதி பட்டம்மாளின் மூத்த புதல்வர் ஸ்ரீ மணிஐயரின் புத்திரியை மணம் செய்திருக்கிருர். ஆமாம், சம்பந்திகள்!

'கர்நாடக சங்கீதம் வரவர தரம்குறைந்து கொண்டு போகிறதென்று சொல்லுகிருர்களே, இது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?' என்று கேட்டதற்கு மணி ஐயர் நீண்டதோர் பிரசங்கமே செய்துவிட்டார். அவர் சொன்னுர்:

'நிச்சயம் தரம் குறைந்து கொண்டு தான் போகிறது! இதற்கு முதற் காரணம் மைக். அதை ஒழித்து விட்டால் தூய சகீதம் தன் பாட்டுக்கு விருத்தியடையும். முற்காலத்தில் அதாவது மைக்ரோபோன் வருவதற்கு முன்பு, பாடுகிறவர்கள் சபையோர் எல்லோரும் தம்மைக் கேட்கக் கூடியதாயிருக்க வேண்டுமென்பதற்காக தமது சாரீரத்தைஅசுரசாதனை செய்து வளம் படுத்திக் கொள்வார்கள். பக்கவாத்தியம் வாசிப்பவர்களும் அவ்விதமே தங்கள் வாத்தியத்தின் நயத்திலும் நாதத்திலும் கண்ணும் கருத்துமாயிருப்பார்கள்-

பொதுமக்கள். தான் பெரிய வித்வான்களை உண்டாக்குபவர்கள். நல்ல சங்கீதம் எது, கெட்ட சங்கீதம் எது என்று பகுத்தறியும் திறமை அவர்களுக்குண்டு.

'சாஸ்திர சங்கீதம் கெடாமலிருக்க வேண்டுமானுல் பழைய குருகுல சிஷ்ய முறைமீண்டும்ஏற்படவேண்டும். கணக்கு படிப்பிப்பது போல், சங்கீதம் வந்தாலும் சரி வராவிட்டாலும்சரி, பள்ளிக்கூடங்களில் வைத்து மாணுக்கர்களுக்கு சங்கீதப் படிப்பு ஊட்டுவதுசரியல்ல. குருவென்று இருந்தவர் தமக்கு குஷி பிறக்கும் நேரத்தில் இரவு இரண்டு மணியாயிருந்தாலும் சிஷ்யர்கள் எல்லோரையும் கூப்பிட்டு ஆர்வத்தோடும் ஊக்கத்தோடும் ஒரு உருப்படியையோ ராகத்தையோ சொல்லி வைப்பார். அது நன் மாணுக்கர் மனதில் நன்ருகப்படிந்து விடும். பள்ளிக்கூடங்களில் மணி அடித்தவுடன் பாடம் ஆரம்பித்து மணி அடித்தவுடன் பாடம் முடிக்கும் முறை நல்லதன்று.

[4-ம் கலம்பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆசிய மார்க்கெட் நிறுவும் பாரதத்தின் யோசனை

## மலேஷிய – இந்திய கூட்டறிக்கை

புதுடில்லி, மே 14

மலேஷியாவிலும், சிங்கப்பூரிலும் தமது நான்கு நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு இன்று அதிகாலை இந்திய வெளியுறவு மந்திரி திரு. சாக்ளா விமான மூலம் பம்பாய் திரும்பினர்.

ஆசிய பிராப்தியத்தில் பெருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஆசிய சபை யொன்றையும், ஆசிய மார்க்கெட் ஒன்றையும் நிறுவுவது பற்றி பாரதத்தின் யோசனையை, சிங்கப்பூர் மலேஷிய பிரதமர்களிடம் நாம் தெரிவித்ததாகத் திரு. சாக்ளா அறிவித்தார்.

ஆசியமார்க்கெட், ஐரோப்பிய பொதுச் சந்தையைப் பின்பற்றி நிறுவப்படுமென்றும் ஆசிய நாடுகள் அனைத்தும் இம்மார்க்கெட்டில் அங்கத்துவம் வகிக்கலாமென்றும் தாம் சம்பந்தப்பட்ட அரசாங்கங்களிரண்டுக்கும் விளக்கியதாகவும் திரு. சாக்ளா கூறினர்.

ஆசியப் பகுதியில், ஆதிக்கம் செலுத்தும் நோக்கம் பாரதத்துக்கு இல்லையென்றும், பல ஆசிய நாடுகளை விடப் பொருளாதார, தொழில் நுட்ப துறைகளில் அபிவிருத்தி அடைந்துள்ள நிலையில் பாரதம் பிற ஆசிய நாடுகளுக்குத் தன்னாலான உதவியை அளிக்குமென்றும் திரு. சாக்ளா, மலேஷிய, சிங்கப்பூர் அரசாங்கங்களிடம் விளக்கிக்கூறியதாகவும் அவர் மேலும் கூறினர்.

கோலாலம்பூரில், பாரத, மலேஷிய அரசாங்கங்கள் சார்பில் கூட்டறிக்கை யொன்று நேற்று வெளிதிடப்பட்டது. ஆசிய பிராயிந்தியத்தில் அமைதி நிலவ, அப்பகுதி நாடுகளுக்கிடையே பொருளாதார ஒத்துழைப்பு முக்கியமென அக்கூட்டறிக்கை வலியுறுத்தியது. இப்பொருளாதார ஒத்துழைப்பு சமத்துவம், பரஸ்பர நன்மைஆகிய குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டுமென்றும் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

சமாதான சகவாழ்வு பாண்டுங் மாநாட்டில் பிரகடனப்படுத்தப்பட்ட குறிக்கோள்கள் ஆகியவற்றில் மலேஷியாவும், இந்தியாவும் தமக்குள்ள நம்பிக்கையை கூட்டறிக்கையில் ஊர்ஜிதப் படுத்தின.

பொருளாதார, கலாச்சார, கல்வித்துறைகளில் இருநாடுகளும் நெருங்கி ஒத்துழைக்க வேண்டுமெனக் கூறிய கூட்டறிக்கை, இருநாடுகளுக்கிடையேயுமான நட்புறவு மேலும் வலுவடையவேண்டுமென்ற விருப்பத்தை வெளியிட்டது.

# மேற்கு பாகிஸ்தானில் அடிமை முகாம்கள்

## விசாரணை செய்யுமாறு அயூப் கான் உத்தரவு

கராச்சி, மே 14

மேற்கு பாகிஸ்தானில் அடிமை முகாம்கள் பலவற்றை வேட்டையாடுவதில் பொலிசார் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

ஜெர்மன் 'நாஸி' காலத்து கைதிகள் முகாம் மாதிரியில் நிறுவப்பட்டுள்ள இவ்வடிமை முகாம்கள் மேற்கு பாகிஸ்தானில் பல இடங்களில் பொலிசாரால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

தனிப்பட்ட காண்ட்ராக்டர்களால் நடாத்தப்படும் இம்முகாம்களில் சிறுவர்கள் கட்டாயமாக வேலை வாங்கப்படுகின்றனர். 24 மணி நேரமும் வேலைகளில் ஈடுபடுத்தப்படும் இச்சிறுவர்களுக்குச் சம்பளம் எதுவும் கொடுக்கப்படுவதில்லை. நாளொன்றுக்கு ஒரு தடவை தான் சாப்பாடு கொடுக்கப்படுகிறது. இச்சிறுவர்களில் பலர் இம்சைக்குள்ளாக்கப் பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கான இத்தகைய சிறுவர்களைப் பொலிசார் விடுதலை செய்துள்ளனர்.

அடிமை முகாம்கள் பற்றி விசாரணை செய்யுமாறு பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் உத்தரவிட்டுள்ளார்.

கடத்திச் செல்லப்பட்ட சிறுவர்களைக் கைவசமுள்ளவர்களுக்குச் சவுக்கடி கொடுக்கப்படுமென்று பொலிசார் அறிவித்துள்ளனர்.

## செங்காவலர் மோதினர்

பீகிங், மே 14

பீகிங்கிலுள்ள வெளியுறவு மந்திரியின் காரியாலயத்தின் முன்னல், செங்காவலரின் இரு பிரிவினர் மோதிக் கொண்டனர்.

சீன வெளியுறவு மந்திரி சென் யீ, கலாச்சாரப் புரட்சியின் எதிர்ப்பாளர் என்று குற்றஞ்சாட்டிச் செங்காவலரில் ஒரு பகுதியினர் ஆர்ப்பாட்டம் செய்தனர். மற்றொரு பகுதியினர் அவருக்கு ஆதரவாக நின்றனர். இதன் விளைவாக இரு கோஷ்டியினருக்கும் கைகலப்பு ஏற்பட்டது.

தெருவில் செங்காவலர் இழுபறிப்பட்ட காட்சியை, அந்நிய தூதுவர்கள் பலர் பார்த்துக்கொண்டு நின்றனர்.

## செய்யாத கொலைக்கு தூக்குத்தண்டனை

பாரிஸ், மே 14

ஆறு வருடங்களுக்கு முன் பிரிட்டனில் நடைபெற்ற ஒரு கொலையைத் தானே செய்ததாக பீட்டர் அல்போன் என்னும் ஆங்கிலேயர் இங்கு ஒப்புக்கொண்டுள்ளார். ஆனல், இக்கொலைக்காக ஏற்கனவே இன்னெருவர், ஜேம்ஸ் ஹன்ரற்றி, தூக்கிலிடப் பட்டுவிட்டார்.

1961-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற இக்கொலை சம்பவத்தின்போது டாக்டர் மைக்கேல் கிரெஸ்டன் [36 வயது] என்பவர் கொலைசெய்யப் பட்டதுடன் அவருடைய 22 வயதான சிநேகிதப்பெண் வலெரி ஸ்டோரி ஐந்து தடவை சுடப்பட்டு, பலாத்காரத்துக் குள்ளாக்கப்பட்டார். டார் இன்று வலெரி ஸ்ரோரி ஐந்து தடவை சுடப்பட்டு, பலாத்காரத் துக்குள்ளாக்ஷப்பட்டார்.

இன்று பாரிசவாதத்துக் குள்ளாகியிருக்கும் செல்வி வலெரி ஸ்டோரிதான், ஹன்ரற்றி தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டபோது, பிரதான சாட்சியாக புரொசிகியூஷன் தரப்பில் இருந்தார்.

கவிஞர்

## ஜோன் மேஸ்பீல்ட் காலமானர்

லண்டன், மே 14

இங்கிலாந்தின் ஆஸ்தான கவிஞரும், கடலைப்பற்றிய கவிதைகளுக்குப் புகழ் பெற்றவருமான ஜோன் மேஸ்பீல்ட் நேற்றுமுன் தினம் இங்கு காலமானர். அவருக்கு வயது 88. அவர் 1930லிருந்து ஆஸ்தான கவிஞராக இருந்துவந்துள்ளார்.

## சூருவளிக்கு 12 பேர் பலி

கான்பூர், மே 14

கான்பூரில் வீசிய சூருவளிக்குப் பன்னிரண்டு உயிர்கள் பலியாகின. நூற்றுக்குமதிகமானேர் காயத்துக்குள்ளாகினர்.

# சிரியாவுக்கு எதிராக இஸ்ரேல் போர் முஸ்தீபு?

## யு தாண்ட் கவலை

ஐ. நா. [நியுயோர்க்], மே14

சிரியாவுக்கு எதிராகப் பலாத்கார நடவடிக்கையில் ஈடுபட இஸ்ரேல் ஆலோசித்து வருவதாகக் கிடைத்துள்ள தகவல்கள் தமக்கு ஆழ்ந்த கவலையை அளிப்பதாக ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் இங்கு அறிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு எதிராக அரபிய நாடுகள் எதுவாகிலும் சரி, ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அந்நாடுகளினுள் சென்று அவர்களை முறியடிக்க இஸ்ரேல் தயங்காது என்று இஸ்ரேல் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சிரியாவுக்குஎதிரானபோர் முஸ்தீபு நடவடிக்கைகளில் இஸ்ரேல் ஈடுபட்டு வருவதாகவும், இஸ்ரேல் சிரியாவைத் தாக்கினல், இஸ்ரேல் அதன் விளைவுகளை ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்குமெனவும் சிரியா அதிகாரி ஒருவர் அறிவித்தார்.

சிரியா - இஸ்ரேல் எல்லையில் நெருக்கடியான நிலைமையைத் தோற்றுவிக்கும் நடவடிக்கைகள் எதுவிலும் ஈடுபடவேண்டாமென இஸ்ரேலுக்கு யு தாண்ட் கோரிக்கை விடுத்துள்ளார்.

# உரிய மரியாதையுடன் வழியனுப்பி வைக்கப்பட்டார்

## முன்னள் ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன்

புதுடில்லி, மே 14

இந்தியாவின் ராஷ்டிரபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்ற டாக்டர்ராதாகிருஷ்ணன், நேற்றுச் சென்னை புறப்பட்டார். அவர், உரிய மரியாதைகளுடன் வழியனுப்பிவைக்கப்பட்டார்.

ரயில்நிலையத்தில், அவருக்கு முப்படை வீரரும் அணிவகுத்து மரியாதை செலுத்தினர். அவரை அங்கு வழியனுப்ப வந்திருந்த பிரமுகர்களில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியும் ஒருவராவார்.

இதற்கு முன்னர், ராஜ்பவன் ஊழியர்களுடன் டாக்டர் ராதாகிருஷ்ணன் பேசினர். அவர்களுக்குச் சிறிய அன்பளிப்புகளும் அளித்தார்.

## சீனவில் 10,000 பேர் கொலை

மாஸ்கோ, மே 14

சீனவில் அடுத்தடுத்து நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகள் அங்கு ஓர் உள்நாட்டுப் போர் உருவை அடைந்துள்ளதாக மாஸ்கோ வானெலி அறிவித்தது.

மா-சே-துங் ஆதரவாளர்களுக்கும், எதிரானவர்களுக்குமிடையே பலமாகாணங்களிலும் கைகலப்பு ஏற்பட்டதாகவும், சென்ற மாதத்தில் 10,000 க்கு மதிகமானேர் கொல்லப் பட்டனர்; அல்லது காயமுற்றனர் என்றும் மாஸ்கோ வானெலி மேலும் கூறியது.

மேற்கு

## ஜெர்மனியுடன் பாகிஸ்தான் உறவு

புதுடில்லி, மே 14

ஆயுதங்கள் பெறும் நோக்கத்துடன் பாகிஸ்தான் மேற்குஜெர்மனியுடன் நட்புறவு வளர்க்கும் முயற்சிகளைத் தீவிரப்படுத்திவருவதாகத் தெரிகிறது.

இங்கு கிடைத்துள்ள தகவல்களின்படி அடுத்தடுத்த மாதங்களில் பாகிஸ்தானுக்குப் பல மேற்கு ஜெர்மன் தலைவர்கள் விஜயம்செய்ய விருப்பதாக பொன்னில் உள்ள பாகிஸ்தான் தூதுவர் திரு. அப்துல் ரஹ்மான் கான் அறிவித்துள்ளாராம். [இன்பா]

## அமெரிக்க வியட்னும் கொள்கைக்கு ஆதரவு

நியூயோர்க், மே 14

வியட்னமில் அமெரிக்கா பின்பற்றும் கொள்கையை ஆதரித்து நேற்று இங்கு ஒரு பிரமாண்டமான கூட்டம் நடைபெற்றது. இதில் 50,000 மக்கள் கலந்து கொண்டனர்.

அண்மையில் அமெரிக்க வியட்னும் கொள்கைக்கு எதிராக நடாத்தப்பட்ட கூட்டமொன்றுக்கு எதிராகவே, இப்பேரணி ஒழுங்கு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த ஒருவரை, கூட்டத்திலிருந்தவர்கள் சிலர் தாரால் எறிந்து தாக்கினர். அவர் முகத்தில் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஜப்பான் கடல் சம்பவம்

# சட்ட விரோதமான நடவடிக்கையில் அமெரிக்கா ஈடுபட்டதாக ரஷ்யா ஆட்சேபம்

மாஸ்கோ, மே 14

'ஜப்பான் கடலில் சர்வதேசச் சட்டவிரோதமான, அபாயகரமான நடவடிக்கைகளில் அமெரிக்கக் கப்பல்கள் ஈடுபடுவதாக' சோவியத் ரஷ்யா, அமெரிக்காவிடம் கடுமையாக ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

சென்ற புதன், வியாழனில் ஜப்பான் கடலில் ரஷ்ய, அமெரிக்க நாசகார கப்பல்கள் ஒன்ருேடு ஒன்று மோதிய சம்பவங்களைக் குறித்தே ரஷ்யா இந்த ஆட்சேபத்தை அறிவித்துள்ளது.

இச்சம்பவங்களையிட்டு அமெரிக்கா தெரிவித்த ஆட்சேபத்தை நிராகரித்த ரஷ்யா, சோவியத் கடற்கரைக்கருகாமையில் அமெரிக்க, ஜப்பானிய கூட்டுக் கடற்படைப் பயிற்சிகள் நடைபெறுவதன் விளைவே இந்நிகழ்ச்சிகளாகுமென்று பதிலுக்குத் தனது ஆட்சேபத்தில் குறிப்பிட்டுள்ளது.

## வியட்னமில் விமானப்போர்

சைகோன், மே 14

ஹானேய் பகுதியில் அமெரிக்க விமானப்படை, வடவியட்னும் 'மிக்' விமானங்களையும், வேறு சில விமானங்களையும் சுட்டு வீழ்த்தியதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

மூன்று அமெரிக்க விமானங்களை வடவியட்னமில் சுட்டு வீழ்த்தியதாக வடவியட்னும் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தல் பற்றிய தகவல்பெற புதிய குழு அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் அதிகரித்து வரும் கள்ளக்கடத்தலை ஒழிப்பது சம்பந்தமான ஓர் அவசர மகாநாட்டை யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்றுக் காலையில் கூட்டியிருந்தார். இம் மகாநாட்டுக்கு உதவி பொலிஸ் அதிபர்களான திரு. ஆர். சி தவராஜா, திரு. வியனகே, திரு. வீரசிங்கா, திரு. பொன்சேகரா ஆகியோரும், சுங்கப்பகுதி உதவி கலெக்டருமான விமலதர்மாவும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இக் கள்ளக் கடத்தலைத் தடுக்க பொலிஸாரும் சுங்க இலாகாவினரும் இணைந்து கடலில் ரோந்து சுற்றுவதெனவும், இதற்கு பொது மக்களின் ஒத்துழைப்புக் கோருவதெனவும், அவசியமேற்படும் போது அரசாங்கத்துக்குச் சொந்தமான இயந்திரப் படகை இதற்குப் பாவிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது

ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களையும் சமூக சேவைச் சங்கங்களின் அங்கத்தவர்களையும் கொண்ட திறமை வாய்ந்த கள்ளக் கடத்தல் பற்றிய இரகசிய தகவல் தரும் குழு ஒன்றை அமைப்பதென்றும் உண்மையான இரகசிய தகவல் தரும் ஒவ்வொருவருக்கும் விசேஷ சன்மானம் வழங்க ஒழுங்குசெய்வதென்றும் மேலும் தீர்மானிக்கப்பட்டது. [ந. நி.]

# கோழிப்பண்ணை நிபுணரின் பேச்சுஇன்று

யாழ்பாணம், திங்கள்

கடந்த ஒருவார காலமாக இலங்கையில் தங்கியிருக்கும் திரு. டேவிட் வாட்டர்மன் பிரிட்டனின் கோழிவளர்ப்பு நிபுணர்களில் சிறந்து விளங்கும் ஒருவராவர். அவர் இதுவரை சுமார் 40 நாடுகளுக்கு பதினைந்து லட்சம் முட்டையிடும் கோழிகளை அனுப்பிவைத்துள்ளார். கோழிவளர்ப்பிலும் பண்ணை நடத்துவதிலும் அவர் பெற்றுள்ள அனுபவம் நிகரற்றது. எப். அன் ஜி. சைக்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தின் பிரதான ஆலோசகரான திரு. வாட்டர்மன் புத்தகப் படிப்பைக் காட்டிலும் அனுபவ ரீதியாக கோழிகளின் தன்மையை அறிந்து அவற்றில் முட்டையிடும் சக்தியை பெருக்குவதே சரியான முறை என்று கூறுகிறார். கோழிகள் முட்டையிடும் திறமையைப் பொறுத்தே பண்ணையில் முன்னேற்றம் தங்கியுள்ளது.

டேவிட்வாட்டர்மன் லண்டன் சர்வ கலாசாலையில் பி. எஸ். ஸி. [விவசாயம்] பட்டம் பெற்று. அமெரிக்காவில் கோழிவளர்ப்பு பயிற்சி பெற்ற பின்னர் இங்கிலாந்திலுள்ள பெரும் பண்ணையாகிய எப். அன் ஜி. சைக்ஸ் லிமிட்டெட்டில் கடந்த 5 வருட காலமாக கடமையாற்றுகிறார்.

'பிரிட்டனிலும் வட ஐயர்லாந்திலுமுள்ள ஏராளமான பண்ணைகளை துவக்கி, வளர்த்து மேற்பார்வைசெய்து வருகிறார். அவர் இப்பொழுது கொம்பனியில் பிரதம ஆலோசகராகவும் இருந்து வருகிறார்.

மலேசியாவிலும் கோழிப் பண்ணைவிஷயமாக ஆராய்ச்கள் நடத்தியுள்ள திரு, வாட்டர்மன் இலங்கையிலும் அந் நாட்டின் கோழி வளர்ப்புக்கோஷ்டி சுவாத்தியமே நிலவுகிறதென்று கருதுகிறார்.

இன்று மாலை 6 மணிக்கு அவர் 'லாபத்துக்கு கோழி வளர்த்தல்' என்னும் விஷயம்பற்றி யாழ்ப்பாணம் வை, எம். சி. ஏ. மண்டபத்தில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவார்.

காச நோயாளர்

# நன்கொடைப்பணம்அதிகரிக்கப்படும்

யாழ்ப்பாணம், திங்கள்

''யாழ்ப்பாண மாவட்டத்தில் காச நோயாளர்கள் தொகை அதிகமாக இருப்பதாலும், அவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் அரசாங்க நன்கொடைப் பணம் குறைவாக விருப்பதாலும், அரசாங்கத்திடமிருந்து மேலதிகமாக மாதா மாதம் 10,000 ரூபா பணம் பெற்று நோயாளர்களுக்கு வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கோரும் தீர்மானத்தை அண்மையில் நடைபெற்ற யாழ். மாவட்ட சமூக சேவை ஆலோசனைக் கூட்டத்தில் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் தெரிவித்தரர்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபய சேகரா தலைமையில நடைபெற்றஇக்கூட்டத்தில் எம். பிக்கள், காரியாதிகாரிகள் உட்பட அநேக சமூக சேவைச் சங்கங்களின் பிரதிநிதிகளும் சமூகம் கொடுத்திருந்தார்கள்.

தீவுப்பகுதி எம். பி. திரு. நவரத்தினம் கோரிய மேற்கண்ட தீர்மானம் பற்றி அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபய சேகரா பேசுகையில் அரசாங்கத்திடமிருந்து மேலதிக நன் கொடைப் பணத்தைப் பெற்று காச நோயாளர்களுக்கு வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர் காச ரோகிகளுக்கான சேமிப்புப் பணத்திலிருந்து போதிய நிதியை எடுத்து இத்தேவையை முதலில் பூர்த்தி செய்யலாமென ஆலோசனை தெரிவித்தார்.

தண்ணீர் விநியோகம் பற்றி தீவுப்பகுதி எம். பி. திரு. நவரத்தினம் பேசுகையில் வைகாசிமாதப் பகுதியில் இங்கு அதிகமாக வரட்சியிருப்பதால் கிணறுகள் வற்றி தண்ணீர்ப் பிரச்னை ஏற்படுவதாகவும், இதுவிஷ

[6-ம் பக்கம் பார்க்க]

# மகோற்சவம்

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் வடக்கு சித்திர வேலாயுத சுவாமீ கோவில்வருடாந்தமகோற்சவம் இன்று பகல் துவஜாரோகனத்துடன் ஆரம்பமாகியது. இரவு கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தின் சார்பில் நல்லைத்திருஞானசம்பந்தர் ஆதீன அதிபர் ஸ்ரீ மத் சுவாமிநாதத் தம்பிரானின் கதாகாலட்சேபம் நிகழ்ந்தது.

# ஆனையிறவு உப்பள அபிவிருத்திக்கு 30 கோடி ரூபாய்

பரந்தன், ஞாயிறு

ஆனையிறவு உப்பளம் தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் கண்காணிப்பில் வந்த பின் இதனை விஸ்தரிப்பதெற்கென 30 கோடிரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த உப்பளத்தில் 1966-67 ல் அறுவடையான உப்பின் தொகை ஏறக்குறைய 8லட்சம்அந்தராகும். 1965-66 ல் ஏறக்குறைய 6,30,000 அந்தர் உப்பும், 1964-65 ல் ஏறக்குறைய 5,25,000 அந்தர் உப்பும் அறுவடை செய்யப்பட்டது. இந்த உப்பளத்தில் ஏறக்குறைய 500 நிரந்தரத்தொழிலாளர்கள் வேலைசெய்துவருகின்றனர். அறுவடை காலத்தில் மேலதிகமாக சுமார் 500 கூலியாட்கள் அமர்த்தப்படுவர்.

1967-ம் ஆண்டில் கூலியாட்களுக்கென 100 நிரந்தரமான வீடுகள் கட்டப்படவிருக்கின்றன. அவ்விதமே வருடந்தோறும் நூறு வீடுகள் வீதம் கட்டுவதற்கும் திட்டம் வகுக்கப்படடிருக்கிறது.

# டிராக்டர் சாரதிகள் போட்டி

பரந்தன், ஞாயிறு

கொழும்பிலுள்ள ஒரு தனிப்பட்ட நிறுவனத்தினர் உழவு இயந்திர சாரதிகளுக்கென பரந்தனில்ஒருபோட்டி நடத்தினர். குறித்த ஸ்தாபனத்தின் உதவி ஜெனரல் மனேஜர் மத்தியஸ்தம் வகிப்பதற்காக வந்திருந்தார். பெருந்தொகையான டிராக்டர் சாரதிகள் இப்போட்டியில் கலந்து கொண்டனர். முரசுமோட்டையைச் சேர்ந்த திரு. ரி. மாணிக்கவாசகர் முதற் பரிசுக்கான ரூபா 75ஐயும், குமாரபுரத்தைச் சேர்ந்த திரு. வி. குமாரசாமி 2-வது பரிசுக்கான 25 ரூபாவையும், மூன்ருவது பரிசு ரூபா 25ஐ உருத்திரபுரத்தைச் சேர்ந்த திரு. ஆர். நாகரத்தினமும் பெற்றனர்.

இறைவன் திருமேனியில்
சந்தனக் காப்பிட்டு
அலங்கரிக்க மிகவும் உகந்த
பச்சை சந்தனம்
உடனுக்குடன் அரைத்துக் கொடுக்கிறோம்.
என்றும் எங்களிடம் கிடைக்கும்.
சுந்தரம் பிறதர்ஸ்
கோவில் அபிஷேகப்பொருட்கள்
மருந்துச்சரக்கு விற்பனையாளர்
(புதிய பஸ் நிலையத்துக்கு அருகாமை)
73, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.



சாளி! நான் கேட்டது இதுவல்ல! ஜின் என்று சொல்லும்போது நான் கேட்பது—

மெஸ்தியா ஜின்னையே

ஏனென்றால் . . . . . . ? ?

1. புதிய மெஸ்தியா ஜின் இரு முறை வடிக்கப்பட்டது.
2. புதிய மெஸ்தியா ஜின் வெற்றி கண்டதோர் விசேஷ வெளிநாட்டு முறைப்படி தயாரிக்கப்படுவது.
3. புதிய மெஸ்தியா ஜின் மிகப் புதுமையான பிரெஞ்சு யந்திரங்களால் செய்யப்படுவது.
4. புதிய மெஸ்தியா ஜின்கள் [கலப்பற்றதும், தோடம்பழ ரஸம் கலந்ததும்] மென்மையானவை — வெண்பட்டும் மஞ்சள் ஊதாவும் — ஆ! அதுதான்!
5. புதிய மெஸ்தியா ஜின்தான் 'கொக்டெயில்' பானத்துக்கு சிறந்த அஸ்திவாரம். அதுமட்டுமல்ல, சாளி நீ நினைக்கமுடியாத 'கொக்டெயில்' எல்லாவற்றையும் அது உருவாக்கும்.
6. புதிய மெஸ்தியா ஜின் ரொம்ப ரொம்ப சுத்தமானது—வெறி அம்மல் என்பதே கிடையாது. ஆனபடியால்தான், மேனை சாளி, நான் ஜின் என்று சொல்லும் போது

புதிய மெஸ்தியா ஜின்னையே குறிப்பிடுகிறேன்

இங்கே காணப்படும் நமது நண்பர் உண்மையிலேயே ரசித்து மதுவை அருந்துபவர். புதிய மெஸ்தியா ஜின்னை தாம் விரும்புவதற்கு ஆறு காரணங்கள் கூறியிருக்கிறார். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:— புதிய மெஸ்தியா ஜின்னை நீங்கள் விரும்புவதற்கு உங்களுடைய சொந்த காரணம் என்னவென்பதை எழுதி புதிய மெஸ்தியா ஜின் போத்தல் லேபல் ஒன்றுடன் புதிய மெஸ்தியா போட்டி மே/பா. விஷன் விளம்பரங்கள் லிமிடெட், 3-வது மாடி, மாக்கான் மரைக்காயர் கட்டிடம், கொழும்பு—1 என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

எத்தனை சீட்டுகளாவது அனுப்பலாம். ஆனல் ஒவ்வொரு சீட்டோடும் ஒருபுதிய மெஸ்தியா ஜின் லேபல் சேர்க்கப் படவேண்டும். பன்னிரண்டு பரிசுகள் கொடுக்கப்படும். முதலாவது பரிசு சிங்கப்பூருக்குப் போய்வர ஓர் இலவச விமானடிக்கட் அல்லது அதற்குப் பெறுமதியான காசு. மிகக் கூடுதலான சீட்டுகள் அனுப்புபவருக்கு சென்னைக்குப் போய்வர ஓர் இலவச விமான டிக்கட் அல்லது அதற்குப் பெறுமதியான காசு. ஒரு விசேஷ நீதிபதி குழுவின் தீர்ப்பே முடிவானது. ஸ்ரீலங்கா டிஸ்ரிலறீஸ் லிமிடெட், விஷன் விளம்பரங்கள் லிமிடெட் ஆகிய ஸ்தாபனங்களில் வேலை செய்வோரும் அவர்களுடைய குடும்பத்தினரும் இந்தப் போட்டியில் பங்குபற்றலாகாது. போட்டிமுடிவு திகதி மே 31, 1967.

சிங்கப்பூருக்கும் சென்னைக்கும்

மெஸ்தியாவுடன் பறந்து செல்லுங்கள்

10 ஆறுதல் பரிசுகள் உண்டு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காங்கேசன்துறை பட்டினசபை

## வேலை விளம்பரம்

காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவரால் பட்டின சபை வீடமைப்புத் திட்டத்திற்கு மயிலிட்டியில் சேரி ஒழிப்புத்திட்டத்தின் கீழ் 4 வீடுகள் கட்டுவதற்கு விண்ணப்பப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

விண்ணப்பப் பத்திரங்கள் மேற்படி பட்டினசபை அலுவலகத்தில் 28-5-67-ந் திகதி நடுப்பகல் 12 மணி வரையும் நன்நம்பிக்கைப் பணமாக ரூபா 25/-, பத்திர வேதனம் ரூபா 2/- கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பகாரர்கள் அரசாங்கத்தில் அல்லது ஸ்தலஸ்தாபனத்தில் ரூபா 20000/- க்குக் குறையாத தொகைக்குப் பதிவு செய்யப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்கள் இணைப்பிரதியுடையதாக இரு பிரதிகளும் 1967-ம் ஆண்டு ஆனி மாதம் 4-ந் திகதி நடுப்பகல் 12 மணிக்குப்பிந்தாமல் பட்டினசபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் பெட்டியிலோ அல்லது பதிவு செய்த தபால் மூலமாகவோ அனுப்பப்படவேண்டும்.

இதைப்பற்றிய விபரங்கள் யாவும் பட்டினசபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பட்டினசபைத் தலைவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. வ. சதாசிவம்,
தலைவர்,
காங்கேசன்துறை,
பட்டினசபை.
வி. வ. செ.

பட்டின சபை அலுவலம்,
காங்கேசன்துறை,
12-5-1967. 1782

---

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
ஜெய்சங்கர் - K. R. விஜயா
நடித்த
**பெண்ணே நீ வாழ்க!**

---

### கல்வி

வகுப்புகள்:

தபாற்கந்தோர் தலைவர், தந்தியாளர் நியமனப் பரீட்சை துரிதமான மீட்டல் வகுப்புகள், தமிழ், ஆங்கிலம், கணக்கு, புவியியல் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 6/-, பொதுஅறிவு, விவேகம் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 5 - ஆங்கில வியாசம், தமிழ் வியாசம் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 4/-. தபாற்செலவு ஒவ்வொன்றுக்கும் 50 சதம் ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 1981

## இன்ஸ்பெக்டர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், திங்கள்

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டராக சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டராக கடமையாற்றியதிரு. விஜயதிலகா இன்று முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [ந.நி]

---

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
நடித்த
**பெரியஇடத்துப் பெண்**

---

**MANOHARA**
Jaffna
Daily at 4-45, 7-00, 9-45
GREGORY PECK
DIANE BAKER
in
**MIRAGE**

---

**REGAL - JAFFNA**
Time: 4-45, 7-00 p. m.
Anna Karina
Gerard Barray
in
**SHEHERAZADE**

---

3-வது வெற்றி வாரம

| | | |
|---|---|---|
| கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] | பிளாஸா [வெள்ளவத்தை] | விஜயா [மட்டுநகர்] |
| ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] | நவா [கொம்பனித்தெரு] | மொடேர்ன் [பண்டாரவளை] |
| விஜிதா [ஹட்டன்] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்] | தீவொளி [நுவரெலியா] |
| மொடேர்ன் [பதுளை] | | |

தென்னகமெங்கும் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.

**ரவிச்சந்திரன் - ஜெயலலிதா**
**ரங்கராவ் - நாகேஷ்**

ஆர். சரஸ்வதி,
மனோகர்,
சீதாலட்சுமி,
மாதவி,
கள்ளபாட்
நடராஜன்
திறம்பட நடித்து
தென்னகமெங்கும்
100 நாட்களுக்கு
மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்.



ஈ. வி. ஆர். பிக்சர்ஸ்

# குமரிப் பெண்

இசை: எம். எஸ். விஸ்வநாதன்
டைரக்ஷன் ராமண்ணா

---

## வரி விளம்பரம்

### தேவை

ஷை சங்கத்திற்கு ஓர் பண்டகசாலை முகாமையாளர் தேவை. தகைமைகள்: 1. எஸ். எஸ். ஸி. சித்தியடைந்தவராயும் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றவராயும் இருத்தல் வேண்டும். [அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது.] 2. வயது 20—30 இடைப்பட்டதாயிருத்தல் வேண்டும். 3. மாதவேதனமாக சகலபடிகளும் உட்பட ரூபா 80/- மட்டும் வழங்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி 22-5-67. அனுப்ப வேண்டிய விலாசம்: தலைவர் பண்டார வன்னியன் பல நோ. கூ. ச., கற்சிலைமடு, ஒட்டுசுட்டான். 1807

### விற்பனைக்கு

முட்டையிடும் பருவம்:

வழக்கமான விலை ரூபா பதினைந்து. அறிமுகப்படுத்து விலை ரூபா பத்து. இச் சலுகை இருபதுநாட்களுக்கு மாத்திரம். அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 2391

றேடியோ, பெட்டகம்...

சொந்தக்காரர் பிறநாட்டுக்குப் போகிறபடியால் கீழ்க்காணும் பொருள்கள் விற்பனைக்குண்டு. பெட்டகம், றேடியோசெற், ஸ்திரிக்கைப் பெட்டி, பெற்றூமாக்ஸ், மேசைகள், பிக்பென் மணிக்கூடு, குத்துவிளக்கு, சரஸ்வதிபடம், கைவாளி, விலாசம்: நன்னித்தம்பி வயிரமுத்து, லோன்றி அளவெட்டி வடக்கு, அளவெட்டி. 1811


### விற்பனைக்கு

கூவும் சேவல்:

வழக்கமான விலை ரூபா ஆறு — அறிமுகப்படுத்தும் விலை ரூபா நாலு. அருணு ஏஜென்ஸீஸ் அளவெட்டி. 2392

காணி

திருநெல்வேலி வடக்கில் பனிக்கர் வளவுக்கு அண்மையில் சகல வசதிகளுடன் 6 3/4 பரப்புப் பனம் காணி விற்பனைக்குண்டு. வாங்க விரும்புபவர்கள் 18-ம் திகதிக்கு முன்பதாக 'ஈழநாடு' மே/பா. த. பெ. எண். 49, யாழ்ப்பாணம்., என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 1810




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருவர் பலி

புத்தளம், ஞாயிறு
வண்ணாத்திவில்லு கம்பஹாயாவைச் சேர்ந்த அக்மன் என்பவர் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியானார். இவரைச் சுட்டுக் கொலை செய்ததாகக் கூறப்படும் ஆரியரத்தின என்ற வாலிபர் புத்தளம் பொலிசாரால் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

கம்பஹாயாவில் வசிக்கும் திருமணமான பெண்ணொருவருடன் மரணமான அக்மன் தொடர்பு கொண்டிருந்ததாகவும், இதனைத் தொடர்ந்தே ஆரியரத்தின ஆத்திரமடைந்து அக்மனைச் சுட்டதாகவும் கூறப்படுகிறது.

புத்தளம் மாஜிஸ்டிரேட் திரு. பிரேமவன்சா திலகரத்தின ஸ்தலத்தில் மரண விசாரணை நடாத்தி, கொலை எனத் திர்ப்பளித்தார். இம்மாதம் 26-ந் திகதி வரை சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்கும்படி மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

——

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

### திங்கள் 15 - 5 - 67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை,

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு 6-15 பாட்டு — சி. நவரத்தினம், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 விவேகச்சகரம், 7-45 தமிழ் மூலம் சிங்களம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் விருப்பம். ——

## நன்கொடை...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

யத்தில் சூழாய் மூலம் நீர் விநியோகம் செய்ய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் சொன்னார்.

யாழ்ப்பாணம் சமூக சேவை நிர்வாக உதவியாளர் திரு. என். சிவசிதம்பரம் பேசுகையில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு அரசாங்கம் நன் கொடைப்பணமாக 104, 300 தற்போது வழங்கிவருவதாகவும், காசநோயாளர்களுக்குமாத்திரம் கடந்த வருடத்தில் 272, 642 ரூபா நன் கொடைப் பணமாக வழங்கப்பட்டதாகவும் சுட்டிக் காட்டினார். ]ந.நி]

———

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு மே மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# துப்பாக்கிக் குண்டுக்கு நேரடியாக...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சிறு துப்பாக்கிஅடையாளங்களும்காணவில்லை. காட்டப்படவும்இல்லை. நான்றைபிள் குண்டுகளின் அடையாளங்களைப் பார்வையிட்டேன் ஒன்று மாணிக்கம் தியாகராசாவின் தையல் கடையின் முன்கதவில் பட்டு உட்சென்று உட்சுவரிலும் இதற்கு சேர்ந்தாற்போல் இருக்கக் காணப்பட்டது. இந்த இடத்தில் வைத்து இன்ஸ்பெக்டர் மூர்த்தி ஒரு குண்டை எடுத்து என்னிடம் தந்தார். அந்தக் கடையின் முன்பகுதியில் புதிய துளைவு ஒன்றும் இருந்தது. அதன் அண்மையிலுள்ள தூணில் குண்டுபட்டபுதிய வேறொரு துளை காணப்பட்டது. இந்த அடையாளமும் தையல் கடை பக்கமாக இருந்தது. சந்தி ஒழுங்கைக்குசெல்லும் வலதுபக்கமுன்பக்கவீட்டின் சுவரில் குண்டுபட்ட துவாரம் காணப்பட்டது. ஆனல் குண்டுகள் எடுக்கப்படவில்லை. இதே ஒழுங்கையில் 50அடி தூரத்துக்குஅப்பால் வலதுபக்க வீட்டின் சுவரில் ஒருபெரியகுண்டுபட்டதுவாரம் காணப்பட்டது. இதற்குள்ளிலிருந்தும் குண்டுகள் எடுக்கப்படவில்லை. இதே வலதுபக்க ஒழுங்கையின் இன்னொரு வீட்டின் முன வாசலில் ஒரு குண்டுத் துவாரம் காணப்பட்டது. அதிலிருந்து குண்டுகள் எடுக்கப்பட்டன. இச்சூடுகளில் இரண்டுசூடு சிறிய துப்பாக்கியினுல் சுடப்பட்டிருக்கலாம். மற்ற நான்கு றைபிள் சூடாகக் காணக்கூடியதாகஇருக்கிறது. மற்ற சூடுகளும் றைபிள்குண்டால் தான் தாக்கப்பட்டவையெ அபிப்பிராயப் படுகிறேன். நான் இந்த அறிக்கையை பி 18 ஆக சமர்ப்பிக்கிறேன். பி 2, பி 3, பி 4, பி 5 இந்த அடையாளங்கள் அநேகமாகசுட்ட இடத்திலிருந்து 80 அல்லது 90 அடி தூரத்திலிருந்து காணப்படலாம்.

கிழக்குப் பக்கத்து தையல் கடையில் இருக்கும் வெளிச்சுவரில் இருந்த குண்டு அடிபட்ட இடங்களை பொலிசார் ஒருவரும் எனக்குக் காட்டவில்லை சிறிய துப்பாக்கியால் சுடப்பட்ட சூடு ரோட்டில் நின்று சுட்டிருக்க வேண்டும். எலும்பு ஒரு கடினமான பொருள். கடினமான பொருளில் குண்டு பட்டால் உடையும். குண்டானது கீழ் தரையில் பட்டு ஆளைப் பிடிக்குமானல் ஆளைக் கொல்லாது. இது நேரடியாகச் சுடப்பட்ட சூடுதான் என எண்ணுகிறேன்.

## "தாக்குவதற்கு முன் எச்சரிக்கை செய்யவில்லை"

ஆர். சேதுநாராயண பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

''சம்பவம் நடந்த தினத்தில் மாலை 7-45 மணியளவில் வல்வெட்டித்துறை சந்திக்குச் சென்றேன். அங்கு ஒரு கூட்டம் நடைபெற்றதைப் பார்த்தேன். பேச்சாளர் ஒருவர் பேசிக்கொண்டு இருக்கும் போது ஜீப்பொன்று அவ்விடத்தில் வந்து நின்றது. ஜீப்பிலிருந்து பொலிசார் இறங்கி கூட்டத்தில் இருந்தவர்களை தாக்கினர். பொலிசார் துப்பாக்கி, சுளகு போன்ற ஒரு பொருள், குண்டாம் தடி முதலியன வைத்திருந்தனர். பொலிசார் கூட்டத்தினரை தாக்குவதற்கு முன்னர் ஒரு எச்சரிக்கை சொற்களையாவது உபயோகிக்கவில்லை.

ஒரு பொலிஸ்காரர் வந்து தடியால் என்னை அடித்தார் வலது பக்கமாகத் திரும்பி ரோட்டிற்கு ஓடினேன். அந்நேரத்தில் வேறொரு பொலிஸ்காரர் வந்து பெரிய தடியால் அடித்தார். நான் நிலத்தில் விழுந்து விட்டேன். அந்நேரத்தில் இராணுவத்தினரும் அவ்விடத்திற்கு வந்தனர். உடனே அவர்கள் கற்களால் எறியத் தொடங்கினார்கள். விழுந்திருந்த நான் எழுந்திருக்க முடியாமல் இருந்ததனுல் மேடையில் இருந்தவர்களை உதவிக்கு அழைத்தேன். அப்போது பருத்தித்துறை எம். பி, பட்டினசபைத் தலைவர், வேற்பிள்ளை ஆகியோர் என்னை தூக்க வந்தனர். அவர்களை பொலிசாரும், இராணுவத்தினரும் தாக்கினர். அதனுல் அவர்கள் அவ்விடத்தை விட்டு அகன்றனர் பொலிசாரால் தாக்கப்பட்ட வேற்பிள்ளை தலையிலிருந்து இரத்தம் சிந்தியது. நான் எழும்ப முடியாமல் அவ்விடத்தில் உதவியளிப்பார் ஒருவருமின்றி விழுந்துகிடந்தேன். என்னைத் தூக்கி ரெலிபோன் எக்சேன்ஸ் கிட்ட எறிந்தார்கள். பின்னர் பொலிசார் அவ்விடத்திலிருந்து சுடத் தொடங்கினர். பொலிசார் என்னைப் பார்த்து வரும்படி கூப்பிட்டார்கள். நான் கால் முறிந்து விட்டதெனச் சொன்னேன். சுட்டுப் போடுவதாகப் பயமுறுத்தினார்கள். என் உடுப்பு முழுவதும் இரத்தம் தோய்ந்திருந்தது. பின்னர் அவ்விடத்திற்கு வந்திருந்த பொலிஸ் மேல் அதிகாரி வந்தபின் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டேன்''.

## "அடிப்பதையும் சுடுவதையும் பார்த்தேன"

சோ. சிவயோகசுந்தரம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: சம்பவம் நடந்த தினம் எனது வீட்டில் இருந்தேன். அச் சமயம் ஐயோ அம்மா என்ற சத்தமும் நாய் குளறிய சத்தமும் கேட்டது. வெளியில் வந்து பார்த்தேன். ஆட்கள் ஓடிக் கொண்டு போனார்கள். சில பொலிசார் அடித்ததையும், சுடுவதையும் பார்த்தேன். உடனே எனக்கு மயக்கம் வந்து விட்டது. அடுத்த நாள் 8 மணியளவில் தான் மயக்கம் தெளிந்தது.

[மிகுதி நாளை வெளிவரும்[

## தேரட்டங்க...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தொகுதிகளை ஏற்படுத்தலாம். அல்லது இவை இரண்டையுமே இணைத்து நடைமுறைக்கு கொண்டு வரலாம். இது இப்பொழுது சாத்தியமாகக்கூடிய தொன்றே'' என்று பிரதம மந்திரி தமது கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

திருமதி பண்டாரநாயகா 1965 ஜனவரியில் இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரிக்கு எழுதிய கடிதம் ஒன்றையும் பிரதமர் மகாநாயக தேரோவுக்கு சுட்டிக் காட்டியிருப்பதுடன் அதனை பத்திரிகைகளுக்கும் வெளியிட்டார்.

அந்தக் கடிதத்தில் திருமதி பண்டாரநாயகா தனி டாப்பு பற்றியல்லாமல் தனி வாக்காளர் தொகுதிகள் ஏற்படுத்துவது பற்றி குறிப்பிட்டிருக்கின்றார். தற்போதைய நிலையில் இந்திய வம்சாவழியினர் தங்களுக்கென பிரதிநிதிகளை தெரிவு செய்ய முடியாமலிருப்பதால் நியமன அங்கத்தவர்களை ஏற்படுத்த வேண்டியிருப்பதாகவும் இதேநிலை எதிர்காலத்திலும் இருக்கக் கூடுமாகையால் தனிவாக்காளர்தொகுதிகள் ஏற்படுத்துவது நல்லது என்று திருமதி பண்டாரநாயக்கா கருத்துவெளியிட்டிருக்கிறார். மேலும் தனி வாக்காளர் டாப்புகள் ஏற்படுத்த வேண்டுமென்ற கொள்கையைத் தாங்கள் வற்புறுத்தப் போவதில்லையென்று திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயகா பார்லிமெண்டில் கூறியிருந்த கருத்தையும் பிரதமர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

## நகைக்கடையில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

புரக்டரே நேரில் வந்து பெற்றுக்கொள்ளுவாரென்றும்கூறி, ரூ.10,000 செக்கை இருவர் மாற்ற முயன்றதாகவும் இதுவிஷயத்தில் சந்தேகம்கொண்ட கடைச் சொந்தக்காரர் பொலிசாருக்குத் தெரிவித்த இரகசியத் தகவலைத் தொடர்ந்தே சந்தேகநபர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டார்கள் என்றும் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினமும் இதே ''செக்கை'' யாழ்ப்பாணத்திலுள்ள தற்காலிக மாஜிஸ்திரேட் ஒருவரது பெயரைச் சொல்லி கன்னுதிட்டியிலுள்ள வேறொரு நகைக்கடையில் மாற்ற எத்தனித்ததாகவும் பொலிசாரின் விசாரணையின் போது தெரியவந்துள்ளதாம். இந்தச் செக் மோசடி சம்பந்தமாக மாவிட்டபுரத்தைச் சேர்ந்த இராஜசிங்கம் இராஜரத்தினம் என்பவரையும் பொலிஸார் தேடி வருகின்றனர். யாழ்ப்பாணப் பொலிஸ் இரகசிய குற்றத் தடுப்புப் பகுதி சார்ஜன்ட் திரு. பி. நவரட்ணம் தொடர்ந்து புலன் விசாரணை செய்து வருகின்றார். [ந.நி.]

## சாமபியனகள்

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ். மாவட்ட மத்திய மகாவித்தியாலயங்களின் ரக் அன்பீல்ட் விளையாட்டுப் போட்டியின் ஆண்கள்போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும், பெண்கள் போட்டியில் கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயமும் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன. யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் தொடர்ந்துஇரு நாட்கள்நடைபெற்ற இப்போட்டியில் வடமாகாணத்தைச்சேர்ந்த 26 பாடசாலைகள்பங்குபற்றின. வித்தியாதிபதி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் பரிசில்களை வழங்கினார்.

## தமிழர்க்கு தனிசலுகையாம்

கொழும்பு, ஞாயிறு
வருமானவரி இலாகாவில் இன்ஸ்பெக்டர் பதவிகளுக்கான நியமனங்கள் பாரபட்சமான முறையில் நடைபெற்றிருப்பதாகவும், தமிழர்கள்தான் நியமனபெற்றிருக்கிறார்களெனவும், தமிழர்களுக்கே உபகாரச்சம்பளம் வழங்கப் பட்டிருக்கிறதெனவும் அரசாங்க சுதந்திரலிகிதர் யூனியன் பிரதமரிடம் முறையிட்டிருப்பதாக மே 13ம்திகதி 'தவச' சிங்களத்தினசரி செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

வியாபாரம பெருக
விளமபரம செய்க

## இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள்
மும்மூர்த்திகள் இசைமன்றத்தின் வருடாந்த இசைவிழா இன்றுமாலை ஆரம்பமாகின்றது. திருநெல்வேலி அம்மன்சிவன்கோவில் வீதியில் நடைபெறவிருக்கும் இன்றைய விழாவுக்கு ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததம்பிரான் சுவாமிகள் தலைமைதாங்குவார். இன்றைய நிகழ்சிகள் பின்வருமாறு:-

மாலை 6-00மணி சந்தான சிருஷ்ணன் கோஷ்டியினரின் மங்களஇசை 6-45 மணி; எம். எஸ். ராஜிசீதாபாட்டு. 7-15மணி; ஏ. நவசிவாயம் பாட்டு. 8-15மணி ஏ. நமசிவாயம் புல்லாங்குழல். 9-00மணி எம். எஸ். அகிலன் பாட்டு. 9-45மணி எஸ். கணபதிப்பிள்ளை பாட்டு. 10-30 மணி: சபாசதசிவம்கோஷ்டி பாட்டு.

## 7 பிள்ளைகளின் தந்தை தற்கொலை

யாழ்ப்பாணம், திங்கள்
நோயின்தொல்லை தாங்க முடியாதநபர் ஒருவர்கிணற்றுள் குதித்து மரணமானார். இப்புரிதாப சம்பவம்நேற்று நள்ளிரவு யாழ்ப்பாணம் கச்சேரி-நல்லூர் வீதியில் நடைபெற்றது.

மரணமான 7 பிள்ளைகளின் தந்தையான முத்துக்குமாரு காசிப்பிள்ளையின் (52 வயது)மரணம் சம்பந்தமாக யாழ்ப்பாணப்பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. இராசநாயகம் மரணவிசாரணை நடாத்தினார்.

காலஞ்சென்றவர் எழுதி வைத்த கடிதமொனறு பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டது. அக்கடிதத்தில் தான் நோயின் தொல்லை தாங்காது தற்கொலைசெய்ய எத்தனிப்பதாகவும் இதனையிட்டு யார் மீதும் அரசாங்கத்தைச் சந்தேகம்கொள்ள வேண்டாம் என்றும் எழுதப்பட்டிருந்தது. தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. [ந.நி.[

## கைம்பெண் றிமாண்டில்

சாவகச்சேரி, ஞாயிறு
கைம்பெண் ஒருவர் தான் பெற்ற பிள்ளையைப் புதைத்ததாக பளைப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து பளைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் என். பினசேனு குறிப்பிட்ட பெண்ணைக் கைதுசெய்து சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜர்செய்தார் பிள்ளையைப் பெற்றபோது உபயோகித்ததாகக் கருதப்படும் சேலையையும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

குறிப்பிட்ட பெண்பளையைச்சேர்ந்தவரெனதெரிவிக்கப்பட்டது.

முடிவில் மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா பெண்ணை இம்மாதம் 22-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு அத்திகதிவரை வழக்கை விசாரணைக்காக ஒத்திவைத்தார்.

## மரண அறிவித்தல்

ஏழாலைவடக்கு திரு. கந்தவனம் அவர்களின் அருமைப் புதல்வரும், திருமதி ஜெயலெட்சுமி கணபதிப்பிள்ளை ஆசிரியை (வேம்படிமகளிர் மகாவித்தியாலயம்) அவர்களின்அன்புக் கணவருமான புறக்டர் திரு. க. கணபதிப்பிள்ளை அவர்கள் காலமாகிவிட்டார் அன்னாரின் பூதவுடல் [15-5-67] திங்கள் பி.ப. 4 மணியளவில் ஏழாலைச்சுடலையில் தகனம் செய்யப்படும்.

நண்பர்களும், உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

செ. வயந்தராசபிள்ளை
2396

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org